# வருடாந்த அறிக்கை

# 2014

## உள்ளடக்கம்


| | | பக்க எண் |
|---|---|---|
| 1.0 | நோக்கு…………………………………………………………… | 1 |
| 2.0 | செயற்பணி…………………………………………………………… | 1 |
| 3.0 | பிரதான நோக்கங்கள்……………………………………………… | 1 |
| 4.0 | நிறுவனக் கட்டமைப்பு……………………………………………… | 2 |
| 5.0 | பிரிவுச் செயற்பாடுகள்……………………………………………… | 4 |
| 5.1 | *ஆலோசனை சேவைகள் பிரிவு……………………………………………* | *5* |
| 5.2 | *அபிவிருத்திப் பிரிவு…………………………………………………………* | *9* |
| 5.3 | *மின் எந்திரவியல் சேவைப் பிரிவு…………………………………….* | *15* |
| 5.4 | *பயிற்சிப் பிரிவு…………………………………………………………* | *29* |
| 5.5 | *மனித வள மற்றும் நிருவாகப் பிரிவு……………………………….* | *40* |
| 5.6 | *நிதிப் பிரிவு…………………………………………………………………* | *46* |

## 1.0 நோக்கு

‘‘நம்பகமானதும் உலகளாவிய மட்டத்தில் போட்டிக்குரியதுமான நிர்மாணக்கைத்தொழிற்றுறையொன்றை இலங்கையில்தோற்றுவித்தல்’’

## 2.0 செயற்பணி

‘‘நிலைபேறான தேசிய அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு உள்ளூர் மற்றும் சர்வதேச தேவைகளை நிறைவேற்றுவதற்கு ஏற்ற விதத்தில் நிர்மாணக் கைத்தொழிற்றுறையின் மூலவளங்களின்அபிவிருத்தியை ஒழுங்குபடுத்துவதன் மூலம் தர நியமங்களை மேம்படுத்தி தேசத்திற்கான இயக்கத்திறன் மிக்க தொழில் துறையையும் நம்பகமான பெறுமானங்களை சேர்க்கின்ற சேவைகளையும் உறுதிப்படுத்தல்.’’

## 3.0 பிரதான நோக்கங்கள்

**ICTAD**இன் பிரதான நோக்கங்கள் பின்வருமாறு:

- அபிவிருத்தி நோக்கங்களில் தேசியக் கிராக்கிகளை நிறைவேற்றுவதில் நிர்மாணக் கைத்தொழிலின் பங்கெடுப்பினை மேம்படுத்தல்.
- நிர்மாணக் கைத்தொழிலில் துறையில் நிலைபேறான வளர்ச்சி, சீர்திருத்தம் மற்றும் மேம்பாட்டை சாதிப்பதில் நிர்மாணக் கைத்தொழில் பங்காளர்களுக்கு மூலோபாயத் தலைமைத்துவத்தை வழங்குதல்.

செயற்பாடுகளின் பிரதான துறைகள் பின்வருமாறு:-

- நிர்மாணக் கைத்தொழிலின் அபிவிருத்திக்கான மூலோபாயங்களைச் சிபாரிசு செய்வதுடன், அவற்றின் அமுலாக்கத்திற்கு உதவி புரிதல்;
- ஒப்பந்ததாரர்களையும் ஆதன விருத்தியாளர்களையும் பதிவு செய்தல். அவர்களின் நிதி,நிருவாக மற்றும் சந்தைப்படுத்தல் ஆற்றலளவுகள் அடிப்படையில் தரப்படுத்தலை நிர்ணயம் செய்தல்;
- நிர்மாணக் கைத்தொழிலில் ஆலோசகர்களின் உயர்தொழிலுக்குரிய தரத்தை மேம்படுத்தல். நிர்மாணக் கைத்தொழிலில் உயர் தொழில்சார் அமைப்புக்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் நிருமாணக் கைத்தொழிலில்ஈடுபட்டுள்ள வேறு பிற அமைப்புக்களுக்கு உதவுதல்;
- நிர்மாணக் கைத்தொழிலில் ஆலோசனை சேவைகளின் ஏற்றுமதிக்காக உதவி நல்குதலும் உற்சகமளித்தலும் மேலும் உள்ளுர் ஒப்பந்தாரர்களுக்கு கடல் கடந்த நாடுகளில் நிர்மாண வேலைகள் மற்றும் சேவைகளை மேற்கொள்வதற்கான வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;
- நிர்மாணக் கைத்தொழிலுக்கு ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்;
- நிர்மாணக் கைத்தொழிலின் மனிதவளத் தேவைகளை மதிப்புரைப்பதுடன், பயிற்சி வசதிகளின் ஏற்பாட்டிற்கு உதவி அளித்தல்
- நிர்மாணக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஆளணியினரினதும் அமைப்புக்களினதும் திறன்கள் மற்றும் நிபுணத்துவத்துவத்தின் உயர் தரத்தை மேம்படுத்தல்;
- நிர்மாணக் கைத்தொழில் தொடர்பான விடயங்கள் மீதான ஆராய்ச்சியை மேம்படுத்தல் அல்லது மேற்கொள்ளுதல்;
- நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தியை மேம்படுத்துவதுடன் உதவி நல்குதல்;
- நிர்மாணக் கைத்தொழிலின் மேம்பாட்டுக்கு தேவையான பிற நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் அல்லது உதவி அளித்தல்;

## 4.0 தாபனம்

### அறிமுகம்

1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனமானது (ICTAD) நிருமாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சின் கீழ் தொழிற்படுகின்றது. இது பணிப்பாளர் சபையின் தவிசாளரினால் தலைமை வகிக்கப்படுகின்றது.

### முகாமைத்துவச் சபை

| பெயரும் தனிப்பட்ட முகவரியும் | பதவி | நியமனத் திகதி |
|---|---|---|
| திரு.அநுர தஸநாயக்க<br>இல. 81/6,கந்தகெட்டிய கார்டன்ஸ்,<br>கொஸ்வத்த வீதி,<br>கிரிவத்துடுவ. | தவிசாளர் | 2013-05-30 |
| திரு. சுசில் சமந்தகுமாரசிங்க<br>மே/பா. பால் குளிரூட்டும்<br>நிலையம், வரையறுக்கப்பட்ட<br>மில்கோ தனியார் நிறுவனம்,<br>இரக்காமம் வீதி,<br>அம்பாறை. | செயற்பாட்டுப் பணிப்பாளர் | 2012-09-10 |
| பட்டய கணிய மதிப்பீட்டாளர்<br>திரு.ஹேமன்த அபோன்சு<br>இல.45/பீ,பாடசாலை வீதி,<br>நாவலை. | உறுப்பினர் | 2013-02-19 |
| கட்டிடக் கலைஞர்<br>திரு. என்.எம்.பி. நவரத்ன<br>26/9 ஏ,1 ஆம் ஒழுங்கை, ரம்பார்ட் வீதி, எதுல் கோட்டை. | உறுப்பினர் | 2013-05-20 |
| திரு.ஜயசிறி சமரதுங்க<br>இல. 162, கண்டி வீதி<br>தளுகம,<br>களணி. | உறுப்பினர் | 2013-05-20 |
| தேசமான்ய எஸ்.பி. லியனாரச்சி<br>இல. 547, அகுரேகொட வீதி,<br>தலங்கம தெற்கு,<br>பத்தரமுல்லை. | உறுப்பினர் | 2013-05-20 |
| திரு எச்.ஆர்.வீ.பி. விஜேவர்தன<br>இல 7ஏ, பலபோவ,<br>தேவாலபொல. | உறுப்பினர் | 2013-06-15 |

பணிப்பாளர் சபையின் தவிசாளரின் தலைமைத்துவத்தின் கீழ்ICTAD தனது பணியினை நான்கு தொழிற்பாட்டுப் பிரிவுகள் ஊடாக மேற்கொள்கின்றது. பின்வருமாறு ஒவ்வொரு பிரிவும் ஒரு பணிப்பாளரின் தலைமையின் கீழ் இயங்குகின்றது:

அ) ஆலோசனைப் பிரிவு


ஆ) நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திப் பிரிவு

அ) நிர்மாண இயந்திர சாதன சேவைகள் பிரிவு

ஈ) பயிற்சிப் பிரிவு

தவிசாளரின் பொதுவான உத்தரவுக்கு உட்பட்ட வகையில் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரான பணிப்பாளர் நாயகம் நிறுவனத்தினது ஊழியர்களின் நிருவாகக் கட்டுப்பாட்டுக்கு பொறுப்பானவராவர். நிருவாக விடயங்கள் நிர்வாக விடங்களுக்கு பொறுப்பான பணிப்பாளர் ஒருவரின் தலைமையிலும் நிதிசார் அலுவல்கள்நிதி விடயங்களுக்கு பொறுப்பான பணிப்பாளர் ஒருவரின் தலைமையிலும் செயற்பாட்டுப் பிரிவுகளாக இயங்குகின்றன. (பிரிவுகளின் செயற்பாடுகளைக் காட்டும் அட்டவணையைத் தயவு செய்து பார்க்கவும்).

## 5.0 பிரிவுரீதியான செயற்பாடுகள்




**செயற்பாடுகள்:**
1. வகுத்தமைத்தலும், கைத்தொழில் அபிவிருத்தியும்
2. தொழில்நுட்ப அபிவிருத்தி

**பிரதான செயற்பாட்டுத் துறைகள்**
1. செய்முறை மேம்பாடு
2. நடைமுறை மேம்பாடு
3. கொள்கை ஆலோசனை
4. ஒப்பந்தக்காரர் அபிவிருத்தி
5. ஆலோசகர் அபிவிருத்தி
6. கொள்கையைக் கண்காணித்தல்
7. பொருள் அபிவிருத்தி
8. தொழில்நுட்பம்
9. கணனி வசதிகளைப் பராமரித்தல்
10. மெண்கணிய அபிவிருத்திலிலும், சோதித்தலிலும் பிரிவுகளுக்கு உதவியளித்தல்

**செயற்பாடுகள்:**
1. நிருமாணப் பொறியியலும், கணக்காய்வும், கணனிச் சேவைகளும்
2. ஒப்பந்தம் தொடர்பான தகவலின் மேம்பாடு / இணைப்பு/ பரப்புதல்

**பிரதான செயற்பாட்டுத் துறைகள்**
1. நிருமாணப் பொருளியல் புள்ளிவிபர, தரவுத் தளம்
2. தொழில்நுட்பக் கணக்காய்வுகள
3. ஒப்பந்த இணக்கம்
4. தகவல் நிலையத்தை நடத்துதல்
5. இக்டாட்'டின் ஆவணங்களை வெளியிடுதலும், மொழிபெயர்ப்பைக கவனித்தலும
6. 'இக்டாட்'டின் பிரசாரத் திட்டங்களை இணைத்தல்
7. சஞ்சிகை, செய்திக் கடிதம், வருடாந்த அறிக்கையை வெளியிடுகல்

**செயற்பாடுகள்:**
1. நிருமாணச் சாதனங்களின் செயற்படுத்தல்,பராமரிப்பில் நிபுணத்துவப் பயிற்சியின் ஏற்பாடு
2. நிருமாணச் சாதனங்கள் தொழிற்படுதல், பராமரிப் பில் நிருமாண ஆளணி யினரின் மனிதவள அபி விருத்தி .

**பிரதான செயற்பாட்டுத் துறைகள்**
1. பொறியாளருக்கும், இயக்குனருக்குமான நிபுணத்துவப்பயிற்சியின் ஏற்பாடு
2. பயிற்சியின் வசதியளிப்பு
3. நிறுவகரீதியானதொழில் அபிவிருத்தி
4. இ.பொ.ஆளணியினருக் கான பயிற்றுனர் பயிற்சி

**செயற்பாடுகள்**
1. நிருமாணக் கைத்தொழில் ஆணையாளரின் மனித வள அபிவிருத்தி

**பிரதான செயற்பாட்டுத் துறைகள்**
1. ஒப்பந்தக்காரர், கைவினைஞர், மேற்பார்வையாளர்கள், முகாமையாளர்கள், முகாமையளர்களின் பயிற்சியின் வசதியளிப்பு
2. நிறுவகரீதியானதும், தொழில்சார்பானதுமான அபிவிருத்தி
3. மனித சக்திஆய்வுகளும், நிறுவகரீதியான தகவலும்
4. நிருமாணக்கைத்தொழில் பயிற்றுனர் பயிற்சி
5. நிபுணர் வாடிக்கையாளர் வடிவமைப்பாளர் பயிற்சி நிருமாண மேற்பார்வை யாளர்களும், முகாமை யாளர்களும்
6. கொள்கை அறிக்கை உள்ளீடுகள்

**செயற்பாடுகள்**
1. பிரிவுகளுக்கான ஆளணி, நிருவாகச் சேவைகளின் ஏற்பாடு
2. நூலகத்தின் பராமரிப்பு

**செயற்பாடுகள்**
1. பிரிவுகளுக்கான நிதி முகாமைத்துவச் சேவைகளின் ஏற்பாடு

## 5.1 ஆலோசனைச் சேவைகள் பிரிவு

**வழங்கப்பட்டசேவைகள்**

எழுத்து மூலமோ அல்லது தொலைபேசி ஊடாகவோ அல்லது நேரடியாகவோ சமூகமளித்து பிரிவுக்கு செய்யப்படுகின்ற வேண்டுகோளின் பேரில் ஒப்பந்தக்காரர்கள்,ஆலோசகர்கள், வாடிக்கையாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் போன்ற நிர்மாணக் கைத்தொழிலின் பங்காளர்களுக்கு பின்வரும் சேவைகளை ஆலோசனைச் சேவைகள் பிரிவு வழங்குகின்றது:

1. நிர்மாண கைத்தொழிலுக்கு ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்

   - நிர்மாணப் பணிப் பெறுகை நடவடிக்கைகள் மற்றும் நிர்மாண ஆலோசனை சேவைகள் தொடர்பான அறிவுரைகள்.
   - ஒப்பந்த நிருவாகம் மற்றும் பிணக்குகள் மீதான ஆலோசனை.
   - உள்ளீடுகளின் விலை ஏற்றஇறக்கத்தின் காரணமாக ஆகுசெலவின் மீள்நிரம்பல் மற்றும் ICTAD சூத்திர முறையின் பிரயோகம் தொடர்பாகஅறிவுரைகளை வழங்குதல்.
   - கட்டிட வேலைகளுக்கான அளவீட்டு முறை மீதான ஆலோசனை (SLS 573)
   - கோரல்களைக் கையாள்வதில்சுதந்திரமான கருத்துக்களை வழங்குதலும் ஆலோசனைகளை வழங்குதலும்.
   - ICTADநியம கூறுவிலையிடல் ஆவணங்கள், விபரக்கூற்றுக்கள்,ஆலோசனை ஆவணங்கள் ஆகியன தொடர்பாக ஆலோசனைஅறிவுரை வழங்குதல்.

2. பிணக்கின் தன்மையைப் பொறுத்து பிணக்குகளை தீர்ப்பதற்காக வசதியளித்தல்/மத்தியஸ்தம் செய்தல் மற்றும் மத்தியஸ்தர்களை பதவிக்கமர்த்தல்.

3. மாதாந்தம் நிர்மாணப் புள்ளிவிபரங்களின் ICTADவிபரக்கூற்றை வெளியிடுதல்.

4. தெரிவு செய்யப்பட்ட சிறிய அளவிலான கருத்திட்டங்கள் மீதான கருத்திட்ட முகாமைத்துவம்,ஆலோசனைச் சேவைகள் மற்றும் சுதந்திரமான அறிக்கைகள் ஆகியவற்றின் ஏற்பாடு.

5. ICTAD நியம கூறுவிலையிடல் ஆவணங்கள்,ICTAD சூத்திர முறை மற்றும் வேறு ஏற்புடைய வெளியீடுகள் என்பவற்றை வெளியிடுதல்/மீளாய்தல்/மொழிபெயர்த்தல்.

6. தகவல்களைப் பரப்புவதற்கும் அறிவைப் பரிமாறிக்கொள்வதற்கும் பொருத்தமான கருப்பொருள்களில் கருத்தரங்குகளை நடத்துதல்.

- **நிருமாணக் கைத்தொழிலுக்கு ஆலோசனைச் சேவையை வழங்குதல்**

கூறுவிலை ஆவணங்களைத் தயாரித்தல், ஒப்பந்த நிருவாகம், தகராறு மீதான தீர்மானம்,ICTAD சூத்திரமுறை,ICTAD நியம கூறுவிலை ஆவணங்களின் விவரக்கூற்றுக்கள் ஆகியவை தொடர்பானஅறிவுரைகளை ஆலோசனைச் சேவைகள் பிரிவு வழங்குகின்றது.இந்த இலவச சேவைகள் பிரிவுக்கு 2014 ஆம் ஆண்டில் வாடிக்கையாளர்கள், ஆலோசகர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் எனப் பலரும் மாதாந்தம் சுமார் 125 பேர் அளவில் நேரடியாக வருகை தந்தும் தொலைபேசி மூலமும்எழுத்து மூலமும் கோரிக்கைகளை முன்வைத்தனர்.சம்பந்தப்பட்ட தரப்பினரால் கோரப்பட்ட விடயங்களுக்கு ஆலோசனைகளும் அறிவுரைகளும் வழங்கப்பட்டுள்ளன

பின்வரும் நிறுவனங்களுக்கு விசேட நிபுணத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டன

- ஸ்ரீ லங்கா சுற்றுலாத்துறை
- மாவட்ட நீதிமன்றம் - ஹொரணை

- **பிணக்கின் தன்மையைப் பொறுத்து பிணக்குகளைத் தீர்ப்பதற்கு வசதியளித்தல்/மத்தியஸ்தம் செய்தல், மத்தியஸ்தர்களை நியமித்தல்/ பதவிக்கமர்த்தல்**

ஒப்பந்த ஆவணங்கள், கொடுப்பனவுகள் மற்றும் ஒப்பந்த நிருவாகம் ஆகியன தொடர்பான ஒப்பந்தப் பிணக்குகளுக்கு முகம்கொடுக்கும் ஒரு தொகை ஒப்பந்தக்காரர்கள் இப்பிரிவிலிருந்து ஆலோசனைகளைக் கோரினர். சில சம்பவங்களில், பிணக்குடன் தொடர்பு பட்ட தரப்பினர்கள்வரவழைக்கப்பட்டு தீர்வொன்றை அடையுமுகமாக அவர்களுக்கிடையில் கருத்துப் பரிமாற்றங்கள் நிகழ்த்தப்பட்டன.

2014ஆம் ஆண்டில் மத்தியஸ்தம் வகிக்கப்பட்டு தீர்க்கப்பட்பட்ட முக்கிய பிணக்குகள்.

- தேசிய சேமிப்பு வங்கி (NSB) நிர்மாணப் பணிகளுக்கான ஆலோசனை
- புலமைச் சொத்து விற்பனை நிலைய புனர்நிர்மாணம்
- திரு எம்.சீ.பீ.பிட்டவக்க அவர்களின் வதிவிட நிர்மாணம்
- ஆசோக அசலாரச்சி என்ட் கம்பனி
- வகசிக்கூ கன்ஸ்ட்ரக்ஷன் கம்பனி

2014ஆம் ஆண்டில் ஒப்பந்தத்திற்கான தரப்புக்களின் வேண்டுகோளின் பேரில் 12மத்தியஸ்தர்களை ICTAD நியமித்தது.மத்தியஸ்தர் குழுவின் பெயர் பட்டியல் 2014 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ICTADஇன் இணையத்தளத்தில் பிரசுரிகப்பட்டது.

- **கருத்திட்ட முகாமைத்துவ சேவைகளை வழங்குதல்**

தொழில்நுட்பம் சாரா அரச துறை நிறுவனங்கள் தமது நிர்மாண கருத்திட்டங்களுக்கான கருத்திட்ட முகாமைத்துவ சேவைகளை இப்பிரிவினால் பெற்றுக்கொண்டுள்ளன. பெறுகை நடைமுறைகள் (கூறுவிலை ஆவணங்களைத் தயாரித்தல், ஒப்பந்ததாரர்களை மற்றும் ஆலோசகர்களை தெரிவு செய்தல் மற்றும் கிடைக்கப்பெற்ற கூறுவிலை ஆவணங்களை மதிப்பீடு செய்தல்) ஒப்பந்த நிருவாகம் மற்றும் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கான சிபாரிசுகள் போன்ற சேவைகள் இதனுள் அடங்கும்.

சேவைகளைப் பெற்றுக்கொண்ட முக்கிய நிறுவனங்கள்,

- இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
- அரச தகவல் திணைக்களம்
- மத்திய சூழல் கருத்திட்டம்
  பாவனையின் பின்னரானதேசிய பிளாஸ்திக்கு கழிவு முகாமைத்துவ கருத்திட்டம் (2 கருத்திட்டங்கள்)
    - ❖ கடுவளை மாநகர சபை
    - ❖ மாத்தறை மாநகர சபை
    - ❖ கண்டி மாநகர சபை
- இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம்

- காணி உபயோக கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்
- பொரளை ஆயுர்வேத வைத்தியசாலை

- **நிருமாணப் புள்ளிவிபரங்களின் ICTADவிவரத்திரட்டினை மாதாந்தம் வெளியிடுதல்**

முன்னைய ஆண்டுகளைப் போலவே மாதாந்தம் வெளியிடப்படும்ICTAD நிர்மாணப் புள்ளிவிபரங்களின் விவரத்திரட்டுக்கள்12 வெளியிடப்பட்டன. இவ்விபரத் திரட்டுக்காக பொருட்களின் விலைகள், சரீரஉழைப்பு வேதனங்கள், பொறிகளின் கேள்வுக் கட்டணங்கள் ஆகியன சேகரிக்கப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு பகுப்பாயப்பட்டன. வாடிக்கையாளர்கள்,ஆலோசகர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் ஆகியோருக்கு சுமார் 1872 எண்ணிக்கையிலான விவரத்திரட்டுகள் மாதாந்தம் விற்பனை செய்யப்பட்டன. ஒப்பந்தக் கருத்திட்டங்களில் உள்ளீடுகளின் விலை ஏற்ற இறக்கங்களைக் கணக்கிடுவதற்கு சுட்டிகள் பயன்படுத்துகின்றன.

- **ICTAD வெளியீடுகளின் மீளாய்வு/வரைவு**

நிர்மாணக் கைத்தொழிலுக்கான ICTAD வெளியீடுகளை மீளாய்வதற்கும்புதிய வெளியீடுகளை வெளியிடுவதற்குமான பணியானது தொழில் நிறுவனங்களின்உறுப்பினர்களைக் கொண்டுள்ள ICTADவெளியீடுகளை முன்னெடுக்கும் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ICTADவெளியீடுகளை மீளாய்தல், புதிய ஆவணங்களை வெளியிடுவதற்கான துறைகளை அடையாளம் காணல்,ICTAD வெளியீடுகளை மீளாய்வதற்கு/புதுப்பிப்பதற்கு உப குழுக்களை நியமித்தல் மற்றும் அதனைICTAD பணிப்பாளர் சபைக்கு சிபாரிசுசெய்தல்,ICTAD வெளியீடுகள் தொடர்பான இதழ்களை மீளாய்தல்/வரைதல்,வளவாளர்களை அடையாளம் காணல்,அவற்றை அங்கீகரித்தல் என்பவற்றுக்கான அறிவுறுத்தல்களை வழங்குவதும் வெளியீடுகள் தொடர்பான தீர்மானங்களை எடுப்பதும் முன்னெடுத்தல் குழுவின் பணிகளாகும்.

புதிய ஆவணங்களை வரைதல்/நடைமுறையிலுள்ள ஆவணங்களை மீளாய்தல், வளவாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட வரைவுகளை மீளாய்தல் மற்றும் இறுதி வரைவுகளை சிபாரிசுகளுக்காக முன்னெடுத்தல் குழுவுக்கு சமர்ப்பித்தல் மற்றும் வளவாளர்களுக்கு புதிய ஆவணங்களை வரைவதற்கான வழிகாட்டல்களை வழங்குதல் போன்ற பணிகளுக்காக வேண்டி முன்னெடுத்தல் குழுவினால் உப-குழுக்கள் நியமிக்கப்படுகின்றன.

2014ஆம் ஆண்டின் போது மூன்று புத்தகங்கள் திருத்தம் செய்யப்பட்டதுடன் இரண்டு புதிய ஆவணங்கள் வரைவு செய்யப்பட்டன.

- ❖ ICTAD/DEV/16 - கொண்கிரீட் தட்டுக்ககளை உறுதியாக வார்ப்பதற்கான விவர வரையறை
- ❖ ICTAD/DEV/17 - சிவில் பொறியியல் மற்றும் நிர்மாண வேலைகள் தொடர்பான தளப் பரிசோதனைக்கான விவர வரையறை
- ❖ ICTAD/ADV/01 - ICTAD நிறுவனத்தினால் பட்டியல்படுத்தப்பட்டுள்ள தீர்ப்பாளர்களுக்கான வழிகாட்டல்கள்
- ❖ சிவில் பொறியியல் அளவீட்டு முறைகளின் தரம் - CESMMSL
- ❖ SCA/3/1 – நீர்பாசன மற்றும் கழிவு நீர் வேலைகளுக்கான விவர வரையறை

- **கருத்தரங்குகளை நடத்துதல்**

நிர்மாணச் சமூகங்களிடையே அறிவு விருத்தியை ஏற்படுத்துவதற்காக வேண்டி பின்வரும் கருப்பொருள்களில் 03 கருத்தரங்குகளைஇப்பிரிவு நடாத்தியது.

- வீடமைப்பில் செலவுத் தாக்கம் - ஏப்ரல் - 2014
- சிவில் பொறியியல் அளவீட்டு முறைகளின் தர நிர்ணயம் - 2014 யூன்
- உள்நாட்டு நிர்மாண ஒப்பந்ததாரர்கள் எதிர்நோக்கும் பொதுப் பிரச்சினைகள் பற்றிய முகாமைத்துவம் - 2014 நவம்பர்

- **மையப் பூங்கா அமைத்தல்**

மையப் பூங்க அமைக்கும் திட்டம் கட்டுமானத் துறையில் சிறந்த ஒழுங்குபடுத்தல் நிறுவனமான SEC நிறுவனத்தினதும் அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்தினதும் NERDC நிறுவனத்தினதும் ஒன்றிணைந்த திட்டமொன்றாகும். மையப் பூங்கா அமைத்தலின் மூலம் எதிர்பார்க்கப்படுவது யாதெனில், நவீன காலத்திற்கு உகந்த வகையில் பழங்காலத்து மற்றும் நவீன கட்டிடப் பொருட்கள் மற்றும் நுட்ப முறைகளைப் பயன்படுத்தல், ஒப்பந்ததாரர்களுக்கும் பொதுமக்களுக்கும் மத்தியில் புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தல் மற்றும் அறிவை விரிவுபடுத்தல், அறிவை பகிர்ந்துகொள்ளல் மற்றும் சூழல் நட்புமிகு கட்டிட நிர்மாணப் பொருட்களை அறிமுகப்படுத்தல் போன்றனவாகும்.

இந்த மையத்தின் மாதிரி வீட்டுப் பூங்கா - நவீன கட்டிடக்கலையுடன் பல்வேறுபட்ட நிர்மாண தொழில்நுட்பங்கள் மற்றும் மூலப் பொருட்கள் பயன்பாட்டினை காட்சிப்படுத்தல். விற்பனை காட்சிக்கூடம், வாடிக்கையாளர்களுக்கு சந்தையிலுள்ள பல்வேறுபட்ட உற்பத்திகள் மற்றும் சேவைகள் பற்றி அவதானிப்புச் செய்வதற்கு ஏற்ற வகையிலான சுவடிக்கூடம், உலகலாவிய ரீதியில் பரந்துள்ள புராதன நிர்மாண தொழில்நுட்பம் மற்றும் நவீன தொழில்நுட்பத்தை வெளிப்படுத்தும் காட்சிப்படுத்தும் பயிற்சி வேலைத் தளங்கள் - நவீன மற்றும் புதிய முறைகளை கற்பதற்கு ஏற்ற வகையிலான பல சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளது.

பொது திறைசேரியிலிருந்து கிடைத்த 40 மில்லியன் ரூபா பணத்தைக் கொண்டு பின்வரும் கட்டிடங்கள் தற்போது அமைக்கப்பட்டுள்ளன.

விற்பனை காட்சிக் கூடம், கல்வி காட்சிக் கூடம் என்பன தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ளன. சந்தைக்கு நவீன மற்றும் புதிய தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட பொருட்களை அறிமுகம் செய்வதற்கு விற்பனைக் காட்சிக் கூடம் துணைபுரியும். கல்வி காட்சிக் கூடம் நவீன தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட பொருட்களை அறிமுகம் செய்யும் நோக்கில் கைவினைஞர்களுக்கு நவீன தொழில்நுட்பம் பற்றிய பயிற்சிகளை வழங்கும் நிலையமாகவும் வீடுகள் மற்றும் ஏனைய நிர்மாணிப்புக்களின் மாதிரிகளுக்கு எவ்வாறு நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது என்பது பற்றிய வசதியளிப்புக்களை வழங்கும் நிலையமாகவும் காணப்படுகின்றது.
அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் தற்போது நிறைவுசெய்யப்படடுள்ள வேலைகளுக்கு மேலதிகமாக அரச மற்றும் தனியார் துறையுடன் ஒன்றிணைந்து தற்போது ஐந்து மாதிரி வீடுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. மாதிரி வீடுகளை அமைப்பதற்கு பின்வரும் நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

அரச பொறியியல் கூட்டுத்தாபனம்
தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்
தேசிய வீடமைப்பு அதிகார சபை
இன்டர்நெஷனல் கன்ஸ்ட்ரக்ஷன் கொன்சோடியம் (தனியார்) கம்பனி
இலங்கை தேசிய நிர்மாண சங்கம்

- **பிணக்குத்தீர்ப்பாளர்களுக்கான டிப்ளோமா பயிற்சிநெறி**

மலேசிஷியாவின் மஸ்தியஸ்தர்கள் பட்டய கிளை நிறுவனத்தினால் பயிற்சியாளர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் டிப்ளோமா சான்றிதழ் பாடநெறிகள் 2014 ஆம் ஆண்டு நடாத்தப்பட்டன. இத்தகைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதன் நோக்கம் பிணக்குத் தீர்வுச் செயற்பாடானது நீண்ட காலத்தையும் அதிக செலவையும் கொண்டிருப்பதால் சம்பந்தப்பட்ட தரப்பினர் சட்ட ரீதியான செயன்முறைக்கு செல்வதற்கு முன்னர் விரைவாகவும் சிரமமின்றியும் பிணக்குகளைத் தீர்த்துக்கொள்வதற்கான மாற்று வழியை பின்பற்றுவதற்கு ஊக்கமளிப்பதாகும்.

பயிற்சியாளர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டம் 2014 ஏப்ரல் 7 – 14 ஆம் திகதி வரை நடைப்பெற்றது. பிணக்குத் தீர்ப்பு டிப்ளோமா பாடநெறி 2014 ஜூன் 14 ஆம் திகதி தொடக்கம் நவம்பர் 23 ஆம் திகதி வரை நடாத்தப்பட்டது.

## 5.2 அபிவிருத்திப் பிரிவு

### 5.2.1 நிருமாண ஒப்பந்தக்காரர்களுக்கு தேசிய பதிவுமற்றும் தரப்படுத்தல் திட்டம்

ஏதாவது குறிப்பான ஒப்பந்தத்திற்கு தொடர்பு இன்றி கருத்திட்டங்களின் வேறு விதமான வகைகளையும் அளவுகளையும் பொறுப்பேற்பதற்கான அவர்களது பொதுவான தகுதியை நிர்ணயிப்பதற்காக உத்தேசமான ஒப்பந்தக்காரர்களின் ஆற்றலளவுகளுக்கான ஒரு திரையிடும் நடைமுறையாகவே பதிவும் தரப்படுத்தலும் விளங்குகின்றன. ஒப்பந்தக்காரரின் தொழில் நுட்ப மற்றும் நிதிசார் நிலையைப் பரிசீலிப்பதன் மூலம் பதிவும் தரப்படுத்தலும் நிர்ணயிக்கப்படுகின்றன.

2014 ஆம் ஆண்டில் 637எண்ணிக்கையிலான புதிய பதிவுகள் வழங்கப்பட்டன, 368 ஒப்பந்தக்காரர்கள் தரமுயர்த்தப்பட்டனர். 517ஒப்பந்தக்காரர்களதுபதிவுகள் புதுப்பிக்கப்பட்டன.

நிர்மாண ஒப்பந்தக்காரர்களின் [பிரதான (கட்டிட மற்றும் சிவில்), விசேட (மின் - பொறிமுறை), விசேட (முடிவுறுத்தல் மற்றும் வேறு விசேட வேலை)] பதிவுக்கான வழிகாட்டல்கள் இவ்வருடத்தில் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் அது நிர்மாணக் கைத்தொழிலின் நலனுக்காக 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் வெளியிடப்படவுள்ளது.

**ஒப்பந்தக்காரர்கள் (Online) தெடரறா முறையில் இணையத்தளம் ஊடாக பதிவுகளை மேற்கொள்ளலும் கண்கானிப்பு முறையும் மற்றும் தேசிய நிர்மாணக் கைத்தொழில் தகவல் முறைமை (NCIIS)**

இத்திட்டம் 2014 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலிருந்து அமுல்படுத்தப்படுகின்றது.

இத்திட்டம் திறைசேரியின் நிதி வழங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. நிர்மாண துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் அனைவரும் இம்முறையை பின்பற்றுவதனூடாக பயணங்களுக்காக செலவிடுப்படுகின்ற காலத்தையும் அதற்காக செலவிடுகின்ற பணத்தையும் சேமிக்க முடியும்.

2014 ஆகஸ்ட் மாதத்திலிருந்து C1 தர ஒப்பந்ததாரர்களுக்கு இம்முறை கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு C2, C3 தர ஒப்பந்ததாரர்களுக்கு இம்முறை 2015 பெப்ருவரி மாதத்திலிருந்து கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

- **தேசிய நிர்மாணக் கைத்தொழில் தகவல் முறைமை (NCIIS)**

இலங்கை நிர்மணிப்புத் துறையின் செயற்பாடுகளின் வளர்ச்சியை கண்காணித்து அறிக்கையிடுவதற்கு தேசிய நிர்மாண கைத்தொழில் தகவல் கட்டமைப்பு எனும் வெப் போர்டல் பயன்படுத்தப்படுகிறது. ஒப்பந்ததாரர்கள் பதிவு, ஒப்பந்த கைத்தொழில் ஒழுங்கு விதிகள் போன்றனவும் மற்றும் எந்தவொரு நபரும் பயன்படுத்தும் வகையில் ஒப்பந்த கைத்தொழிலுடன் தொடர்புற்ற ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்தி பற்றிய தகவல்கள் வெப் போர்டலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலும் சர்வதேச மட்டத்திலான தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு நம்பகமான ஒரு மூலமாகவும் இது காணப்படுகின்றது. நிர்மாணக் கைத்தொழிலுக்கு பங்களிப்புச் செய்கின்ற காரணிகளின் தளம்பல்கள், அரச ஒழுங்கு விதிகள், நியமங்கள் மற்றும் சட்டவாக்கம் மற்றும் ஒப்பந்ததாரர்களின் செயலாற்றுகை போன்ற விடயங்களுக்கு ஏற்புடையவாறு இது அடிக்கடி விருத்தி செய்யப்படுகின்றது. உலகலாவிய மட்டத்திலுள்ள நிர்மாணிப்பாளர்களுக்கு தேசிய சேவையாகவும் இலங்கையின் நிர்மாணிப்புத் துறையை மேலும் வினைத்திறனுடன் மற்றும் பயனுறுதியுடன் முன்னெடுத்துச் செல்வதற்கு வசதியளிப்பதற்கும் 2015 ஆம் ஆண்டின் 1 ஆம் தவணையிலிருந்து வெப் போர்டலை இணையத்தளத்தின் மூலம் நேரடியாக செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

### 5.2.2 நிருமாணத் திறமைக்கான ICTAD விருதுகள்

நிர்மாணத்துறையில் உயர்தொழில்சார் பண்பினையும் திறமையையும் மேம்படுத்தும் நோக்கில் வருடாந்த விருது வழங்கும் திட்டமொன்று 1990 ஆம் ஆண்டில் ICTAD இனால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. அதன் தொடராக 2014 ஆம் ஆண்டு 24 ஆவது முறையாகவும் அது நடாத்தப்பட்டது. நிர்மாண முகாமைத்துவத்தில் முதன்மையான செயற்றிறன், தொழில்நுட்ப நிபுணத்துவம், தரத்திலும் உயர்தொழில் தன்மையின் உயர் மட்டம்,புத்தாக்கத்திறனுக்குரிய பொருத்தமான தொழில்நுட்பத்தின் அறிமுகம்,பயிற்சியில்கைவினைஞர்களின் பங்கெடுப்பு ஆகியவற்றை இவ் வெகுமதித் திட்டம் அங்கீகரிக்கின்றது.

2014ஆம் ஆண்டின் போது 25வேலைத்தளதரிசிப்புக்களும் /குழுக் கூட்டங்களும் நடத்தப்பட்டன. ஆண்டின் இறுதியில் 5 முன்வைப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் செய்யப்பட்டதுடன் 2013 ஆம் ஆண்டுக்கான விருது வழங்கும் விழாவை ICTAD உம் NCASL உம் கூட்டாக சேர்ந்து ஏற்பாடு செய்ததுடன் சுகததாஸ உள்ளக அரங்கில்விருதுகளும் பரிசுகளும் வழங்கப்பட்டன.

**நிருமாணத்துறை சிறப்பு விருதுகள் - 2014**
**வெற்றியாளர்கள் - கட்டிடக் கருத்திட்டங்கள்**

| விருதின்வகை | கருத்திட்டம் | ஒப்பந்ததாரர் |
|---|---|---|
| **சிறப்பு விருது** | அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் ஆலயத்தின் புதிய தலைவருக்கான வசிப்பிடம், கொழும்பு – 07. | மாகா இன்ஜினியரிங் (பிறைவட்) லிமிடட் |
| **சிறப்பு விருது** | மேர்சடெஸ் பென்ஸ் நிலையம், கொழும்பு 14, | மாகா இன்ஜினியரிங் (பிறைவட்) லிமிடட் |
| **சிறப்பு விருது** | கார்கில்ஸ் (சிலோன்) பீஎல்சி நிறுவனத்தின் வர்த்தக அபிவிருத்தி நிலையம், இல 420, வைத்தியசாலை வீதி,யாழ்ப்பாணம். | நவலோக்க கன்ஸ்ட்ரக்ஷன் கம்பனி (பிறைவட்) லிமிடட் |

| | | |
|---|---|---|
| **சிறப்பு விருது** | ஹெவிலொக் சிட்டி அபிவிருத்தி திட்டத்தின் கிளப் ஹவுஸ் மற்றும் நீச்சல் தடாகம் அமைத்தல். கொழும்பு 06. | இன்டர்நெஷனல் கன்ஸ்ட்ரக்ஷன் கொன்சோடியம் (பிறைவட்) லிமிடட் |
| **சிறப்பு விருது** | தேசிய நெனோ தொழில்நுட்ப பூங்கா கட்டம் 1 ஏ, மஹேனவத்த, பிட்டிபன, ஹோமாகம. | துடாவே பிரதர்ஸ் (பிறைவட்) லிமிடட் |
| **சிறப்பு விருது** | பிறைம் லேன்ட்ஸ் தலைமை அலுவலகக் கட்டிடம், டீ. எஸ்.சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு – 08. | துடாவே பிரதர்ஸ் (பிறைவட்) லிமிடட் |
| **சிறப்பு விருது** | எயாபோர்ட் கார்டின் லெஷர் (பிறைவட்) லிமிடட்டின் ஹோட்டல் கட்டிடத் தொகுதி, சீதுவை. | துடாவே பிரதர்ஸ் (பிறைவட்) லிமிடட் |
| **சிறப்பு விருது** | சினகவா பீச் ஹொடெல், இல 30, பழைய குரு நிவஸ வீதி, பலபிட்டிய. | என் என்ட் ஏ இன்ஜினியரிங் சர்விசஸ் (பிறைவட்) லிமிடட் |

**நிர்மாணத்துறை செயற்றிறன் விருது - 2014**

**சிவில் பொறியியல் கருத்திட்டங்களுக்கான விருதுகள்**

**வகை I–பெறுமதி ரூபா 1000 மில்லியனுக்கு மேல்**

| | **கருத்திட்டம்** | **ஒப்பந்தக்காரரின் பெயர்** |
|---|---|---|
| 1 | சீன அரசாங்கத்தின் நிதி உதவியுடன் வடக்கின் வீதிப் புனரமைப்புத் திட்டம் – கண்டி – யாழ்ப்பாண (A 009) வீதி மறுசீரமைப்பு மற்றும் புனமைப்பு கல்கமுவ – யாழ்ப்பாணம் – 40 கி.மீ. துணை ஒப்பந்த வேலை கண்டி – யாழ்ப்பாண வீதி (A 009) 120 KM தொடக்கம் 207 KM வரை. | இன்டர்நெஷனல் கன்ஸ்ட்ரக்ஷன் கொன்சோடியம் (பிறைவட்) லிமிடட் |
| 2 | அம்பேபுஸ்ஸ – திருகோணமலை (A 006) வீதி மறுசீரமைப்பு மற்றும் புனமைப்பு தம்புல்லை தொடக்கம் ஹபரண வரை (91+420 Km – 112+920 Km) | இன்டர்நெஷனல் கன்ஸ்ட்ரக்ஷன் கொன்சோடியம் (பிறைவட்) லிமிடட் |
| 3 | வடக்கு வீதி இணைப்புத் திட்டத்தின் (NRCP) கீழ் தம்புல்லை தொடக்கம் தோணிகலை வரை யு 009 வீதி மறுசீரமைப்பு மற்றும் புனமைப்பு (74+650 Km – 98+000 Km) | இன்டர்நெஷனல் கன்ஸ்ட்ரக்ஷன் கொன்சோடியம் (பிறைவட்) லிமிடட் |
| 4 | வடக்கு வீதி இணைப்புத் திட்டத்தின் (NRCP) கீழ் மாங்குளம் தொடக்கம் முல்லைத்தீவு வரை A 034 வீதி மறுசீரமைப்பு மற்றும் புனமைப்பு ( 38+500 Km – 49+100 Km) | இன்டர்நெஷனல் கன்ஸ்ட்ரக்ஷன் கொன்சோடியம் (பிறைவட்) லிமிடட் |
| 5 | நாரம்மலை – கிரிஉல்ல – தன்கொட்டுவ வீதி புனரமைப்பும் தரப்படுத்தலும் ( 0+000 – 16+030) | சீஎம்எல் – எம்டீஇ கன்ஸ்ட்ரக்ஷன் லிமிடட் |

| | | |
|---|---|---|
| 6 | நுகேகொடை தொடக்கம் ஹோமாகமை வரையிலான A 004 வீதி CRWB திட்டத்தின் கீழ் புனரமைப்பும் தரப்படுத்தலும். ஒப்பந்த இலக்கம் RDA/NHSP/ICB/-05 | ஈபர்ட்என்ட் சன்ஸ் ஹோல்டிங்ஸ் (பிறைவட்) லிமிடட் |
| 7 | டயலொக் ஒப்டிகல் பைபர் நெட்வர்க் திட்டம் – கட்டம் 2 மற்றும் 3. | எக்சஸ் இன்ஜினியரிங் பீஎல்சி |
| 8 | சிறிபோபுர மேம்பால திட்டம். ஒப்பந்த இலக்கம் LK/CPRPA/ MAGA/C1A/-3 | மாகா இன்ஜினியரிங் (பிறைவட்) லிமிடட் |
| 9 | பாலாவி – கல்பிட்டி (B 349) வீதிப் புனரமைப்பு (14.0 KM 40.6 Km ) ஒப்பந்த இலக்கம் RDA/ RNIP/PRP2/ PAKAGE – C/C13 | மாகா இன்ஜினியரிங் (பிறைவட்) லிமிடட் |
| 10 | கேகாலை மாற்று வழி வீதித் திட்டம் கட்டம் III | மாகா இன்ஜினியரிங் (பிறைவட்) லிமிடட் |

**வகைII– பெறுமதி ரூபா 500 - 1000 மில்லியனுக்கு இடைப்பட்டவை**

| | | |
|---|---|---|
| 11 | முன்னுரிமை வீதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வீதி புனரமைப்பும் மேம்பாடும் – பிபிலை – ஊரணிய – மஹியங்கனை வீதி ( 22+000 – 39+580 Km) | கே.டீ.ஏ. வீரசிங்க என்ட் கம்பனி (பிறைவட்) லிமிடட் |

**வகைIII– பெறுமதி ரூபா 100 - 500 மில்லியனுக்கு இடைப்பட்டவை**

| | | |
|---|---|---|
| 15 | கதுருகல்தொல சிறிய நீர் மின் வலு நிலைய கருத்திட்டம் –(KMPH) | எக்சஸ் இன்ஜினியரிங் பீஎல்சி |
| 16 | கந்தளாய் கல்தலாவ நீர் குழாய் பொருத்தும் திட்டத்தின் விநியோகம் மற்றும் பரிமாற்றம் –(KGPL) | எக்சஸ் இன்ஜினியரிங் பீஎல்சி |
| 17 | ரஜபிஹில்ல பரிமாற்றல் திட்டத்திற்கு வால்வுகள், டீஐ குழாய்கள், பொருத்திகள் என்பவற்றை வழங்கலும் பொருத்தலும்– ( 15 கி.மீ நீளம்) மடவலை நீர் வழங்கல் திட்டம் – கண்டி. | மாகா இன்ஜினியரிங் (பிறைவட்) லிமிடட் |
| 18 | கிரிதலை அணைக்கட்டு புனரமைப்பு | காமினி கன்ஸ்ட்ரக்ஷன் |
| 19 | கந்தளாய் நீர் சுத்திகரிப்பு ஆலைக்கான மஹாவலி உள்வாய் திட்டத்திற்கு வால்வுகள், டீஐ குழாய்கள், பொருத்திகள் என்பவற்றை வழங்கலும் பொருத்தலும். | சுபசிங்க கன்ஸ்ட்ரக்டர்ஸ் என்ட் ஏர்த் மூவர்ஸ் |

### வகைIV - பெறுமதி ரூபா 100 மில்லியனுக்கு மேல்

| | | |
|---|---|---|
| 22 | வெளிப்புர சுற்று வட்ட அதிவேக நெடுஞ்சாலை கருத்திட்டம் (தென் பகுதி) தற்காலிக டோல் பிளாஸா கொதலாவல பரிமாற்றம் | இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம். |

### மின் எந்திரவியல் கட்டுமான விருதுகள்

| விருதின் வகை | கருத்திட்டமும் வெற்றியாளரும் | ஒப்பந்ததாரர் |
|---|---|---|
| திறமை விருது | புறக்கோட்டையில் அமைந்துள்ள கொழும்பு கோல்ட் சென்டரின் குளிஷரூட்டல் மற்றும் காற்றோட்டப் பணிளுக்கான பொருட்கள் வழங்கல்,பொருத்தல் மற்றும் கண்கானிப்பு. | பிரிஜி இன்ஜினியரிங் சர்விசஸ் (பிறைவட் லிமிடட்) |

### பசுமைக் கட்டுமான விருதுகள்

| விருதின் வகை | கருத்திட்டமும் வெற்றியாளரும் | ஒப்பபந்ததாரர் |
|---|---|---|
| சிறப்பு விருது | வேரியஸ் சிஸ்டம்ஸ் (பிறைவட்) லிமிடட் நிறுவனத்தின் தொழிற்சாலை ஊழியர்களுக்கான வதிவிடக் கட்டிடம் மற்றும் வேலைத் தளத்தின் அபிவிருத்திப் பணிகள் | நுவனி கன்ஸ்ட்ரக் ஷன் (பிறைவட்) லிமிடட் |
| சிறப்பு விருது | ஹற்றன் நெஷனல் வங்கி – கல்முனை | நிரோன் என்டர்பிரைசஸ் |

### அரசாங்க நிறுவனங்களுக்கான விசேட பாராட்டு விருதுகள்

| விருதின் வகை | கருத்திட்டமும் வெற்றியாளரும் | ஒப்பபந்ததாரர் |
|---|---|---|
| நிர்மாணச் செயற்றிறனுக்கான தேசிய விருது | வயம்ப பல்கலைக் கழகத்தின் கேட்போர் கூடம் | இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் |
| நிர்மாணச் செயற்றிறனுக்கான ICTAD விசேட விருது | மட்டக்களப்பு புதிய கல்லடிப் பாலம் | அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம் |
| செயற்றிறனுக்கான ICTAD விசேட விருது | பத்தரமுல்லை வேட்டர்ஸ் எட்ஜ் திருத்தப்பணி | இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் |
| செயற்றிறனுக்கான ICTAD விசேட விருது | மரந்தகஹமுல நெல் களஞ்சியசாலை | இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் |

### 5.2.3 வாடிக்கையாளர் முறைப்பாடுகளைக் கையாள்தல்

வீடமைப்பு நிர்மாணக் கைத்தொழில் அமைச்சு,NCASL மற்றும் ICTADஆகிய நிறுவனங்களின் உறுப்பினர்களைக் கொண்ட பூர்வாங்க விசாரணைக் குழாமொன்று ஒப்பந்தாரர்களிடமிருந்து கிடைத்த முறைப்பாடுகளை விசாரிப்பதற்காக அமைக்கப்பட்டது.

2014 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள்

| **விளக்கம்** | **2014 பிணக்குகள்** |
|---|---|
| ICTADநிறுவனத்தின் தகவலுக்காக மாத்திரம் | 11 |
| ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விளக்கம் கோரலும் அவர்களினால் வழங்கப்பட்ட பதில்களும் | 11 |
| தீர்க்கப்பட்டவைகள் | 23 |
| ICTAD நிறுவனத்துடன் தொடர்பற்றவை | 7 |
| **மொத்தம்** | **59** |

### 5.2.4 ICTAD சஞ்சிகை– 2014

2014 ஆம் ஆண்டுக்கானICTAD சஞ்சிகை மஹாபிமானி விருது வழங்கும் வைபவத்தில் 2014 நவம்பர் மாதம் வெளியிடப்பட்டது. நிர்மாண கைத்தொழிலின் தர விடயங்கள் தொடர்பான தகவலை பரப்புவதே சஞ்சிகையின் பிரதான நோக்கமாகும். நிர்மாணக் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்கு பயனுள்ள கட்டுரைகளையும் தகவலையும் சஞ்சிகை வழங்குகின்றது.

இது சஞ்சிகையின் 12 வது பதிப்பாகும். இந்த வருடத்திலும் பங்காளர்களினாலும்புத்திஜீவிகளினாலும் வழங்கப்பட்ட மிக உயர்ந்த ஆதரவும் அர்ப்பணிப்பும் காரணமாகICTAD வரலாற்றின் 5ஆவது தடவையாகவும் சர்வதேச மத்தியஸ்த சஞ்சிகையொன்றாக திகழ்ந்தது.

### 5.2.5 ICTAD இன் கணனி முறைமை

பின்வரும் மிக முக்கிய பகுதிகளுக்கு கவனம் செலுத்தப்பட்டு கணனி முறைமையும் இணைய தளமும் திருப்திகரமாகப் பராமரிக்கப்பட்டன.

1. ஒப்பந்ததாரர்களின் தகவல் கட்டமைப்புக்கு (தனிநபர்) ‘Save’ மற்றும் ‘Print’ எனும் மாற்றீடுகளை அறிமுகம் செய்தல்.
2. தேசிய நிர்மாணத்துறை ஒப்பந்தக்காரர்களுக்கான இணையத் தளம் ஊடான தொடரறா பதிவு (On line) மற்றும் கொடுப்பனவு செலுத்தல் முறைக்கான திட்டத்தை நிறைவு செய்தல்.
3. ஆவணப் பாதுகாப்பு முறையை நிறைவு செய்தல் மற்றும் தொடர்ந்தும் ஆவணங்களைப் பாதுகாத்தல். புதிதாக கிடைக்கப்பெற்ற ஆவணங்களை ஆவண முறைக்குள் உட்படுத்துதல். (அபிவிருத்திப் பிரிவின் பதிவு கோவைகள்)
4. தேசிய நிர்மாணத்துறை ஒப்பந்தக்காரர்களுக்கான இணையத் தளம் ஊடான தொடரறா கண்காணிப்பு கட்டமைப்பு செயற்திட்டத்தை நிறைவு செய்தல். (C1,C2 மற்றும் C3) மற்றும் தற்போது C1 ஒப்பந்ததாரர்களில் 50% இணைப்பாக்கத்திற்குள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

5. (தேசிய நிர்மாணக் கைத்தொழில் தகவல் திரட்டு) எனும் பெயரில் நிர்மாணக் கைத்தொழில் வங்கி திட்டத்தை ஆரம்பித்தல். டிசம்பர் மாத இறுதியில் கருத்திட்டத்தின் 85% நிறைவு செய்யப்பட்டுள்ளது.
6. ICTAD நிறுவனத்தின் இன்டர்நெட் வசதியை கண்காணிப்பதற்கு/கட்டுப்படுத்துவதற்கு தரவு சர்வர் (Data Server) மற்றும் தரவு மையத்தை அபிவிருத்தி செய்தல்.
7. ICTAD நிறுவனத்தில் தகவல் தொழில்நுட்ப பிரிவொன்றை ஆரம்பித்து அதற்கு தேவையான ஆளணியை நியமிக்கப்பட்டுள்ளது.
8. ICTAD நிறுவனத்தின் இணையத்தளத்தை சிங்களம், தமிழ், ஆங்கிலம் எனும் மும் மொழிகளிலும் பிரசுரித்தல்.
9. அன்றாட செயற்பாடுகளை பராமரித்தல் மற்றும் ICTAD இணையத்தளத்தை நாளதுவரைப்படுத்தல்.
10. ICTAD நிறுவனத்தின் ஏனைய பிரிவுகளின் நடவடிக்கைகளையும் சுமூகமாக கொண்டு செல்ல தேவையான கணினி வன்பொருட்களை கொள்வனவு செய்தல் (கணனிகள், பிரின்டர்கள், பெக்ஸ் இயந்திரம்)

### 5.2.6 2014 ஆம் ஆண்டில் நடைபெற்ற மாநாடுகள்/கருத்தரங்குகள்/செயலமர்வுகள்

இவ்வாண்டின் போது பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டன.

- நிர்மாணக் கைத்தொழிலில் நெனோ தொழில்நுட்பத்தின் பயன்பாடு தொடர்பான செயலமர்வு –2014மார்ச்
- நிர்மாணக் கைத்தொழிலில் பொறியியல் மென்பொருட்களின் பயன்பாடு பற்றிய செயலமர்வு – 2014 ஏப்ரல்
- தீப் பாதுகாப்பு மற்றும் தடுப்பு முறைமை பற்றிய கருத்தரங்கு – 2014 மே
- நிர்மாணக் கைத்தொழில் காரணமாக ஏற்படக்கூடிய சூழல் மாசடைவு மற்றும் அதனை தனிப்பது எவ்வாறு என்பது பற்றிய கருத்தரங்கு – 2014 ஆகஸ்ட்
- சரியான வேலைத்தள அனுபவம் பற்றிய கருத்தரங்கு – 2014 ஆகஸ்ட்
- பாதை செப்பனிடல் தொழில்நுட்பம் பற்றிய கருத்தரங்கு – 2014 ஒக்டோபர்

நிர்மாணக் கைத்தொழில் தொடர்பிலான தகவலைப் பரப்புவதும் மற்றும் வருமான தோற்றுவிப்பைஅதிகரிப்பதும் இந்த கருத்தரங்குகளை/செயலமர்வுகளை நடத்துவதன் நோக்கமாக உள்ளது

## 5.3 மின் எந்திரவியல் சேவைப் பிரிவு


நிர்மாண உற்பத்தித்திறனில் அளவிடக்கூடிய அதிகரிப்பொன்றைச் சாதிப்பதற்காக நிர்மாண கைத்தொழிலில் தகுதிவாய்ந்த நிருமாணச் செயற்பாடு ஒன்றை உருவாக்கு வதற்காக நிருமாணச் சாதனங்களின் தொழிற்பாடு, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவம் ஆகியன மீது தோச்சிகளையும் அறிவையும் பகிர்வதே மின் எந்திரவியல் சேவைப்பிரிவின் (EMS) நோக்காகும்.

மின் எந்திரவியல் சேவைப் (EMS) பிரிவின் நோக்கங்கள் வருமாறு:

1. நிர்மாண இயந்திர சாதன பொறிமுறையாளர்களுக்கும் இயக்குனர்களுக்கும்தமது தொழில்களை செயற்றிறனுடனும் திறமையாகவும் மேற்கொள்வதற்காக அவர்களது தகுதியை மேம்படுத்தல்.

2. நிர்மாண இயந்திர சாதன மேற்பார்வை மற்றும் முகாமைத்துவ ஆளணியினர் தமது தொழில்களைச் செயற்றிறமையாகவும் திறமையாகவும் மேற்கொள்வதற்காக அவர்களது தகுதியை முன்னேற்றுதல்.
3. நிர்மாணத்துறையின் கிடைப்புத் தன்மையை மேம்படுத்தும் நோக்கில் பழுதுபார்த்தல் ஆகுசெலவை குறைத்து நேரத்தைக் மீதப்படுத்தும் முகமாக நிர்மாண சாதனங்களைப் பயன்படுத்துவோர் மத்தியில் பொருத்தமான தடுப்பு பராமரிப்பு செயல்முறைகளை விருத்திசெய்தலும் அமுல்படுத்தலும்.
4. நிர்மாணக் கைத்தொழிலினுள் பிரவேசிக்க உத்தேசிக்கும் நிர்மாண இயந்திர சாதன பொறிமுறையாளர்களுக்கும் இயக்குனர்களுக்கும் முறைமையான அடிப்படைப் பயிற்சியை வழங்குதல்.
5. நிர்மாணச் சாதன பயிற்சி நிலையத்தின் (CETRAC) மாதிரி வேலைத்தளத்தில் அவசியமான பயிற்சியை வழங்குவதன் மூலமும் நிர்மாணச் சாதன பழுதுபார்த்தல் நிலையங்களின் நியமத்தை மேம்படுத்துவதன் மூலமும் கைத்தொழிலுக்கு உதவியளித்தல்.
6. இலங்கை நிர்மாணச் சாதன பொறிமுறையாளர்களினதும் இயக்குனர்களினதும் சீவியத் தொழிலின் சமூக அங்கீகரிப்பை மேம்படுத்தல்.

இயக்குனர் பயிற்சி நிலையம் (OTC) மற்றும் நிர்மாணச் சாதன பயிற்சி நிலையம் (CETRAC) ஆகிய இரு அலகுகளை ICTADஇன்EMS பிரிவுகொண்டுள்ளது.




### 5.3.1 இயக்குனர் பயிற்சிக் கல்லூரி

**நோக்கு**

" நிர்மாணக் கைத்தொழில் துறைக்கு தேவையான திறமையுள்ள உழைப்பாளர் படையணி ஒன்றை கட்டி எழுப்பும் நோக்கில் நிர்மாணத்துறையுடன் தொடர்புற்ற செயற்பாட்டு, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவம் தொடர்பான திறனையும் அறிவையும் பகிர்ந்து கொள்வதினூடாக அளவீடு செய்ய முடியுமான நிர்மாண உற்பத்தித் திறனை அடைவதே எமது இலக்காகும்."

**செயற்பணி:**

"நிர்மாணக் கைத்தொழிலின் திறமைகளை பகிர்ந்தளித்தல் மற்றும் தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் அறிவு, பராமரிப்பு மற்றும் நிர்மாண உபகரணங்களின் முகாமைத்துவத்தினூடாக திறமையுள்ள தொழிற்படையொன்றை நிர்மாணத் துறையில் உருவாக்குதல் மற்றும் அதனூடாக நிர்மணத்துறையின் பயனுறுதியை அளவிட முடியுமான ஒன்றாக மாற்றுதல்"

**நோக்கங்கள்:**

- நிர்மாணத்துறை சார்ந்த இயந்திர உபகரணங்களை இயக்கும் நபருக்கு தேசிய மட்ட திறமைகளுக்கு ஏற்றாற் போல் பயிற்சி அளித்தல்.
- இயந்திர உபகரணங்களின் முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை தொடர்பான முகாமைத்துவ பயிற்சி நெறிகளை நடாத்துதல்.
- நிர்மாணத்துறை இயந்திர சாதனங்கள் இயக்குனர்களுக்கான தேசிய தொழிற்றுறை தேர்ச்சிப் (NVQ) பரிசோதனைகளை நடாத்தல்.
- ஒப்பந்த இயந்திரங்களை இயக்குகின்றவர்களின் திறனை அதிகரிப்பதினூடாக ஏற்புடைய பணிகளை வினைத்திறனுடனும் செயற்றிறனுடனும் நிறைவேற்ற முடியுமாதல்.
- நிர்மாணப் பணிகளுக்காக இயந்தி உபகரணங்களை வாடகைக்கு விடுதல்.
- அரசாங்க கருத்திட்டங்களில் ஒரு பகுதியைப் பெற்று புதிய இயக்குனர்களுக்கு அதிக அனுபவத்தைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்தல்.

**அறிமுகம்**



நகரி டிரக்டர்கள், சுமையேற்றிகள், தோண்டிகள், மோட்டார் தரப்படுத்திகள் போன்றவற்றின் பாதுகாப்பு, அடிப்படைப் பராமரிப்பு மற்றும் தொழிற்படுத்தல் தொழில்நுட்பங்கள் ஆகியவற்றுடனான விசேட தொடர்புடன் நிர்மாண சாதனங்கள் மீதான பயிற்சியை இயந்திர சாதனப் பயிற்சி கல்லூரி வழங்குகின்றது. 55 தொகுதிகளைக் கொண்ட நிர்மாண இயந்திர சாதனங்களையும் போதிய எண்ணிக்கையிலான பயிற்றுவிப்பு உத்தியோகத்தர்களையும் ஆசிரியர்களையும் இயந்திர சாதனப் பயிற்சிக் கல்லூரி கொண்டுள்ளது.

பயிற்சியாளர்களுக்கு தொழிலின் போதிலான திறமைகளைப் பகிர்வதற்கான செயன்முறைப் பயிற்சிக்காக பயிற்சி நேரத்தின் சுமார் 70%ஒதுக்கப்பட்டுள்ளதுடன், மீதி 30% பயிற்சி நேரம் பாடபோதனைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. பயிற்சியாளர்களுக்கு தொழிலின் போதிலான செயல்முறைப் பயிற்சி வழங்கப்படும் அதேவேளை வருமானத்தை ஈட்டிக் கொள்ளும் நோக்கத்திற்காக சில நிர்மாணச் சாதனங்கள் கேள்வுக்கு விடப்படுகின்றன.

இயக்குனர் பயிற்சி கல்லூரியினால் (OTC)நடாத்தப்படும் பயிற்சிகள் நிறுவன ரீதியான பயிற்சிகளையும் தொழில் பயிற்சிகளையும் உள்ளடக்கியுள்ளன. ஒரு பயிற்சியாளன் ஆகக் குறைந்தது மூன்று மாத தொழிற் பயிற்சியையும் நிறுவன ரீதியான பயிற்சியையும் பூர்த்தி செய்த பின்னர் அவர் NVQதகைமையைப் பெறுகின்றார். இயக்குனர் பயிற்சி கல்லூரி (OTC)நிர்மாண இயந்திர சாதன இயக்குனர்களுக்கான தேசிய வர்த்தக பரிசோதனைகள் மற்றும் NVQ பரீட்சைகளையும் நடாத்துவதற்கு NAITA நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**பின்வரும் பயிற்சி நெறிகள் தற்போது இ.ச.ப.நி.(OTC)இல் நடத்தப்படுகின்றன:**

1. பூர்வாங்கப் பயிற்சி

    1.1 அடிப்படை நிர்மாணச் சாதனங்கள் பராமரிப்பு

2. பயில்திறன் அபிவிருத்தி

    2.1 பாரமற்ற நிர்மாணச் சாதனங்கள்
    2.2 தொட்டி பாரவண்டி
    2.3 பண்னை டிரக்டர்
    2.4 பாதை ரோலர்

3. மணல் நகர்த்தும் சாதன அடிப்படை மட்டிசைப்புகள்

    3.1 நகரி டிரக்டர்
    3.2 சக்கரத்திலான சுமையேற்றி
    3.3 மோட்டார் தரப்படுத்தி
    3.4 நீரியல் தோண்டி
    3.5 பின்வாரி ஏற்றி
    3.6 சக்கரத் தடை பளுவேற்றி

4. சிறப்பு சாதனங்கள்

    4.1 நடமாடும் கிரேன்
    4.2 பொறி ஏற்றி இறக்கி
    4.3 முள் வாரி ஏற்றி
    4.4 கிரேன் பாரவண்டி

5. தொழில் தேர்வுகள்

    5.1 தேசிய தொழில் தேர்வுகள்
    5.2 NVQ தேர்வுகள்

6. விசேடமாக வடிவமைக்கப்பட்ட பயிற்சித் திட்டங்கள்

    இ.ப.க. இல் நடத்தப்படும் சகல பயிற்சி நெறிகளும் கட்டணம் அறவிடப்படும் பயிற்சி நெறிகள் என்பதுடன் இவற்றில் சில பாடசாலையை விட்டு விலகியோரினதும் தொழிலற்ற இளைஞர்களினதும் மத்தியில் உயர்வான கிராக்கியைக் ஏற்படுத்தியுள்ளன.

7. கருத்தரங்குகள்/செயலமர்வுகள்

நிர்மாணக் கைத்தொழில் துறையின் கேள்விக்கு ஏற்ப OTC கல்லூரியினால் நிர்மாண சாதனங்களின் முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் திறன் தேர்வுகள் என்பன நடாத்தப்படுகின்றன.OTCயின் பணிகளை விரிவாக்கும் நோக்கிலும் சகலருக்கும் நன்மை பயக்கும் விதத்திலும் 2014 ஆம் ஆண்டு சாரதிகளுக்கென விசேட செயலமர்வு நடாத்தப்பட்டது.

2014 ஆம் ஆண்டுக்கான பயிற்சியாளர்களின் எண்ணிக்கையும் ஒவ்வொரு பயிற்சித் திட்டம் தொடர்பிலான சாதனைகளும் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளன

| | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | திட்டமிடப்பட்டவை | | முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|
| | | திட்டங்களின் எண். | பங்கெடுப்பாளர்களின் எண். | திட்டங்களின் எண். | பங்கெடுப்பாளர்களின் எண். |
| 1.0 | பூர்வாங்கப் பயிற்சி | | | | |
| | 1.1 நிருமாணச் சாதனங்களின் அடிப்படை பராமரிப்பு | 22 | 528 | 17 | 395 |
| 2.0 | பயில்திறன் அபிவிருத்தி | | | | |
| | 2.1 பாரமற்ற சாதனம் | 11 | 33 | 01 | 01 |
| | 2.2 டிரக்டர் | 12 | 36 | 01 | 06 |
| | 2.3 தன்னியக்க ரோலர் | 11 | 22 | 04 | 11 |
| | 2.4 தொட்டி பாரவண்டி | 12 | 12 | 02 | 02 |
| 3.0 | மண் அகற்றும் சாதனங்கள் அடிப்படை மட்டிசைப்புகள் | | | | |
| | 3.1 நகரி ட்ரக்டர் | 06 | 12 | 01 | 01 |
| | 3.2சக்கரத்திலான சுமையேற்றி | 12 | 24 | 04 | 15 |
| | 3.3 மோட்டார் தரப்படுத்தி | 12 | 60 | 7 | 38 |
| | 3.4 நீரியல் தோண்டி | 12 | 60 | 8 | 70 |
| | 3.5 பின்வாரி ஏற்றி | 12 | 180 | 10 | 117 |
| | 3.6 சக்கரத் தடை பளுவேற்றி | 12 | 24 | 02 | 08 |
| 4.0 | நிபுணத்துவச் சாதனங்கள் | | | | |
| | 4.1 நடமாடும் கிரேன் | 12 | 36 | 4 | 14 |
| | 4.2 பொறி கொண்டுசெல்லி | 11 | 22 | 06 | 14 |
| | 4.3 முள்கரண்டி ஏற்றி இயக்கி | 12 | 36 | 04 | 10 |
| | 4.4 கிரேன் பாரவண்டி | 12 | 36 | 05 | 23 |
| | மொத்தம் | 181 | 1121 | 76 | 725 |

**நிர்மாண சாதனங்கள் இயக்குனர்களை இனம்காணல் - மஹாபிமாணி 2014**

“ மஹாபிமாணி 2014” தேசிய நிர்மாண விருது வழங்கும் வைபவம் இதற்கு முன்னர் எப்போதும் விருது பெற்றிறாத நிர்மாண கைவினைஞர்கள் மற்றும் இயக்குனர்கள் என சகல தரப்பினரையும் மதிப்பீடு செய்வதை நோக்கமாகக் கொண்டு இரண்டாவது முறையாகவும் நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (ICTAD) மற்றும் இலங்கை தேசிய நிர்மாண சங்கம் என்பன இணைந்து “மஹாபிமாணி 2014” தேசிய நிர்மாண விருது வழங்கும் வைபவத்தைஒழுங்கு செய்தன. நிர்மாண கம்பனிகள் மற்றும் உழைப்புப் படையினரை 10 தரங்களின் கீழ் வகைப்படுதி மதிப்பிடப்படுகின்றது.விண்ணப்பதாரர்கள் 70 பேரில் இலங்கையில் சிறந்த மோட்டர் கிரேடர் தெரிவு இயக்குனர் பயிற்சி நிறுவனதினால் மேற்கொள்ளப்பட்டது. சிறந்த மோட்டர் கிரேடர் இயக்குனர்கள் மூவருக்கு விருதுகள் வழங்கப்பட்டன. 2014 நவம்பர் 15 ஆம் திகதி இறுதி பரிசளிப்பு விழா சுகததாஸ உள்ளக அரங்கில் நடைபெற்றது.

**இயந்திர சாதனங்களை வாடகைக்கு விடுதல்**

இயந்திர சாதனங்களை வாடகைக்கு விடுவதன் மூலம் மேலதிக சேவையொன்று இயக்குனர் பயிற்சிக்கல்லூரியால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் மூலம் பயிற்சி நிலையத்திற்கு மேலதிக வருமானம் கிடைக்கப்பெறுகின்றது. பயிற்சியை முன்னிலைப்படுத்தி கையிருப்பிலுள்ள இயந்திர சாதனங்களை கட்டுமானக் கைத்தொழிலுக்கான சேவை நோக்கத்தில் வாடகைக்கு விடப்படுகின்றன.

**நிர்மாண கருத்திட்டங்கள்**

இயக்குனர் பயிற்சி நிலையம் இயந்திர சாதனங்களை இயக்கும் மற்றும் பணிகளை கையாளக்கூடிய அனுபவமுள்ள ஆளணியை கொண்டுள்ளது.இதன் காரணமாக அது ஒப்பந்த அடிப்படையில் நிர்மாணக் கருத்திட்டங்களை கையாளுவதற்கான தகுதியை தன்னகத்தே கொண்டுள்ளது. இது வருமான அதிகரிப்புக்கு துணைசெய்கின்றது. அத்துடன் மனிதவள அபிவிருத்திக்கும் விசேடமாக மாணவர்களின் “ தொழில் பயிற்சிக்கு” தேவைான மானியங்களை வழங்குகின்றது. இந்த திட்டத்தினுடாக பயிற்சி பெறும் இயக்குனர்களுக்கு இயந்திரங்களை உபயோகிக்கும் பாரிய சந்தர்ப்பம் கிடைக்கின்றது. ஏனெனில் அது இயந்திரங்களை மற்றும் ஆளணியை பயிற்சிக்காகஒரே நேரத்தில் பயன்படுத்தும் போது மேலும் பிரயோசமாக நேரத்தை சேமிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

**போம்புருஎல்ல நீர்த்தேக்க புனர்நிர்மாணம்**

இத்திட்டம் நுவரெலியாவில் நடைமுறைப்படுத்தப்பட்டது. 2014 ஆம் ஆண்டு இயக்குனர் பயிற்சி நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட ஒரு கருத்திட்டமாகும். இத்திட்டத்தின் பெறுமதி 10 மில்லியன் ரூபாவாகும். இத்திட்டம்OTC இலிருந்து வெளியாகிய மாணவர்களுக்கு மிகவும் பிரயோசனமாக காணப்பட்டது.







## 2014 ஆம் ஆண்டின் போது ஈட்டப்பட்ட வருமானம்

| தொழில் வகுதி | வருமானம் (ரூபா.மி) |
|---|---|
| பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 13.242 |
| இயந்திரங்கள் வாடகை | 10.097 |
| நிர்மாண கருத்திட்டங்கள் (போம்புருஎல்ல) | 4.744 |
| மொத்தம் | **28.083** |

### 5.3.2 நிருமாணஇயந்திர சாதனப் பராமரிப்பு பயிற்சி அலகு

நிர்மாண இயந்திர சாதனப் பராமரிப்பு பயிற்சி நிலையத்தின் பொறிமுறை பயிற்சி அலகானது (CETRAC) பத்தரமுல்ல, பெலவத்த, டி.பி.விஜேசிங்க மாவத்தையில் 17 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ளது. நவீன நிருமாணச் சாதனங்களின் பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்பு மீது ஏதாவது பயிற்சி பாடநெறியை நடத்துவதற்கான முழு வசதிகளையும் CETRAC கொண்டுள்ளது.பொறிமுறை/சிவில் எந்திரவியலாளர்களுக்கும் மற்றும் கருத்திட்ட முகாமையாளர்களுக்குமான பயிற்சி நெறிகளும் CETRACநிறுவனத்தில் நடத்தப்படுகின்றன.





**CETRAC இன் பயிற்சித் திட்டங்கள்**

1996 ஒக்டோபர் மாதத்திலிருந்து 2001 செப்டம்பர் மாதம் வரையிலான தொழில்நுட்ப ஒத்துழைப்புக் கருத்திட்ட காலத்தின் போது ஜப்பானிய நிபுணர்களின் உதவியுடன் CETRACஇன் பயிற்சித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.பொறிமுறையாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் எந்திரவியலாளர்கள் ஆகியோருக்கு நிர்மாண இயந்திர சாதனங்களின் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவம் தொடர்பான பயிற்சியை CETRAC வழங்குகின்றது. அண்மையில் ICTAD இனால்CETRACஇல் கட்டிட சேவைகள் தொடர்பான பொறியியல்பயிற்சித் திட்டங்களை நடத்துவதற்குஆரம்பிக்கப்பட்டுள்ளது. கட்டிட காற்றுச்சீராக்கல் முறைமை, கட்டிட மின்சார முறைமை,நீர் விநியோக வடிகால் முறைமை மற்றும் தீ பாதுகாப்பு முறைமை ஆகியனவே அவையாகும்.

**நிர்மாணக் கைத்தொழிலுக்கு புதிதாகச் சேர்ந்தவர்களுக்கான பயிற்சி நெறிகள்**

இளைஞர்களின் தொழிலின்மை பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உதவுவதற்காக பாடசாலைகளை விட்டு முன்கூட்டியே விலகுபவர்களுக்கு அதிகளவு தொழில்முன்னிலைப் பயிற்சி நெறிகளை விருத்தி செய்வதற்கும் நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் 2014ஆம் ஆண்டில் பின்வரும் பாடநெறிகள் நடத்தப்பட்டன.

அடிப்படை பொறிமுறையாளர் பயிற்சி நெறி (BM)

**அடிப்படை பொறிமுறை பயிற்சித் திட்டம்**

தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையுடனான (NAITA) கூட்டு முயற்சியுடன் அடிப்படைப் பொறிமுறை பயிற்சித் திட்டம் நடத்தப்படுகிறது. இது மூன்று வருட பயிற்சிப் பாடநெறி என்பதுடன் CETRACஇல் 09 மாதங்களைக் கொண்டநிறுவனரீதியான பயிற்சியையும்தொழில் நிலையங்களில் 27 மாதங்களைக் கொண்ட செயல்முறைப் பயிற்சியையும் அடக்குகின்றது. இப்பயிற்சி நெறியை க.பொ.த. (சா/த) பரீட்சையுடன் பாடசாலையை விட்டு வெளியேறுவோர் பின்பற்றுவதற்கு தகுதிபெற்றவர்களாவர். வருடமொன்று60 பயிற்சியாளர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்கள். இப்பாடநெறியை வெற்றிகரமாக முடித்துக் கொள்ளும் பயிற்சியாளர்கள்,NAITAஇனால் நடத்தப்படும் தேசிய தொழில் சோதனைக்குத் தோற்றுவதற்கு தகுதி பெறுவதுடன், 2 வருட சேவை அனுபவத்தை ஈட்டிய பின்னர் தரம் IIபொறிமுறையாளராக தகுதியடைவர்.

இப்பயிற்சியாளர்களுக்கு NAITAஇனால் மாதாந்தம் ரூபா 1,000/- கொடுப்பனவு செய்யப்படுவதுடன், அவர்களுக்கான இலவச இடவசதி, பாடநெறிச் சாதனங்கள், வேலைத்தள வசதிகள், சீருடைகள், பாதுகாப்புக் கருவிகள் ஆகியன பயிற்சிக் காலத்தின் போது வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு வருடமும் வேறுபட்ட தொகுதிகளைச் சேர்ந்த சுமார் 100 பயிற்சியாளர்கள் CETRACஇல் நிறுவனரீதியிலான பயிற்சியை மேற்கொள்வதுடன், அதன் மொத்தச் செலவினத்தை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது. இது ஆண்டு ஒன்றுக்கு அண்ணளவாக 10 மில்லியன் ரூபாவாகும். இத்திட்டத்தின் மூலம் பயனடைந்த சகல முன்னாள் பயிற்சியாளர்களும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பயனுள்ள வகையில் தொழிலாற்றுகின்றார்கள். இவர்களில் சிலர் நிர்மாணச் சாதனங்களின் பழுதுபார்த்தல்களுக்கும் பராமரிப்புக்கும் தமது சொந்த வேலைத்தளங்களைத் தாபித்துள்ளார்கள்.

**ஊழியர்களின் பயில்திறனைத் தரமுயர்த்துவதற்கான மேலதிகப் பயிற்சி நெறிகள்**

நிர்மாணச் சாதனங்களின் பழுதுபார்த்தல், பராமரிப்புமற்றும் முகாமைத்துவம் ஆகியவற்றில் சம்பந்தப்பட்டுள்ள பொறிமுறையாளர்களினதும் மேற்பார்வையாளர்களினதும் மற்றும் முகாமையாளர்களினதும் தொழில்நுட்ப அறிவைப் புதுப்பிப்பதற்காக மேலதிக பயிற்சி நெறிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பயிற்சியாளர்களுக்கும் தனிப்பட்ட கவனத்தைச் செலுத்துவதற்காக பயிற்சியாளரின் உள்ளெடுப்பு 12 பேருக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இப்பயிற்சி நெறிகளைப் பின்பற்றுவதற்கு சம்பந்தப்பட்ட துறைகளில் போதியளவு அனுபவம் அவசியமாகும்.

**கனிஷ்ட பொறிமுறையாளர்களுக்கு பயிற்சித் திட்டம் (மட்டம் 2)**

நிர்மாணச் சாதன பழுதுபார்த்தல் நிறுவனங்களில் தொழில்புரியும் கனிஷ்ட பொறிமுறையாளர்களின் அறிவையும் பயில்திறன்களையும் புதுப்பிப்பதற்காக இப்பயிற்சி நெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி நெறியைப் பின்பற்றுவதற்கு இரண்டிலிருந்து ஐந்து வருடங்கள் வரையிலான அனுபவம் அவசியமாகும். தமது ஊழியர்களின் பயிற்சித்

தேவைகளைப் பொறுத்து ஏதாவது தெரிவு செய்யப்பட்ட பயிற்சிநெறிகளுக்கு தொழில்வழங்குனர்கள் அவர்களை அனுப்புவதற்காக இப்பயிற்சி நெறி 9 பயிற்சி நெறிகளாக பிரிக்கப்பட்டுள்ளன. நீரியல் மற்றும் பொறிநுட்பவியல் போன்ற துறைகள் நிர்மாணக் கைத்தொழிலில் உயர்ந்த கிராக்கியைக் கொண்டுள்ளதுடன்இத்துறைகள் மீது மேலதிக பாடநெறிகள் நடத்தப்படல் வேண்டும்.

**சிரேஷ்டபொறிமுறையாளர்களுக்கு பயிற்சித் திட்டம் (மட்டம் 3)**

சிரேஷ்ட பொறிமுறையாளர்களின் தொழில்நுட்ப அறிவையும் பயில்திறனையும் புதுப்பிப்பதற்காகவும் தவறுகளை கண்டறிவதிலும் சீரமைத்தலிலும் அவர்களைப் பயிற்றுவிப்பதற்காகவும் இந்த உயர் மட்ட பயிற்சிப் பாடநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டுள்ள பொறிமுறையாளர்கள் இப்பயிற்சி நெறியில் பங்கெடுப்பதற்கு தகுதியைக் கொண்டுள்ளார்கள். தமது பொறிமுறையாளர்களின் பயிற்சித் தேவைகளைப் பொறுத்து, ஏதாவது தெரிவு செய்யப்பட்ட பயிற்சி நெறிக்கு தொழில் வழங்குனர்கள் அவர்களை அனுப்புவதற்காக இப்பயிற்சி நெறி 6 வேறுபட்ட துறைகளைக் கொண்டுள்ளது. நீரியல்கள், மற்றும் இயக்கத்திரனியல் போன்ற இந்த துறைகள் நிர்மாணக் கைத்தொழிலில் மிகவும் உயர்வான கிராக்கியைக் கொண்டுள்ளன. எனவே,இத் துறைகளில் மேலதிக பாடநெறிகள் நடத்தப்படவேண்டியுள்ளன.





**மேற்பார்வையாளர்களுக்கான பயிற்சித் திட்டம்**

நிர்மாணச் சாதனங்களின் பராமரிப்பில் சம்பந்தப்பட்டுள்ள வேலைத்தள மேற்பார்வையாளர்களின் அறிவை உயர்த்துவதற்காக மேற்பார்வை பயிற்சித் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இரு வருட அனுபவத்தைக் கொண்டுள்ள மேற்பார்வையாளர்கள் இப்பயிற்சி நெறிக்கு சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்கள்.


**பொறியியலாளர்கள்/முகாமையாளர்களுக்கான பயிற்சிப் பாடநெறிகள்**


நிர்மாணஇயந்திர சாதனங்களின் பயன்படுத்தலிலும் பராமரிப்பிலும் சம்பந்தப்பட்டுள்ள பொறியியலாளர்கள், வேலைத்தள முகாமையாளர்கள் மற்றும் கருத்திட்ட முகாமையாளர்கள் ஆகியோரின் அறிவை மேம்படுத்துவதற்காக இப்பயிற்சித் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

நிர்மாண இயந்திர சாதனங்களைப் பராமரித்தல் மற்றும் பயன்படுத்தல் ஆகியன மீது சிவில் பொறியியலாளர்களுக்கும், கருத்திட்ட முகாமையாளர்களுக்கும் தொழில்நுட்ப அறிவை நிருமாண இயந்திர சாதனங்களைப் பயன்படுத்தல் தொடர்பான பயிற்சி நெறி வழங்குகின்றது.

இரு வருட அனுபவத்தைக் கொண்டுள்ள பொறியியலாளர்கள் இப்பயிற்சி நெறிக்கு சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்கள்.

நிர்மாண இயந்திர சாதனங்களின் பழுதுபார்த்தலிலும் பராமரிப்பிலும் சம்பந்தப்பட்டுள்ள பொறிமுறைய பொறியியலாளர்களுக்கும், முதல் வரிசை முகாமையாளர்களுக்கும் நிருமாணச் சாதனங்களின் பராமரிப்பு மீதான பயிற்சி நெறி தொழில்நுட்ப அறிவை வழங்குகின்றது. இரு வருட அனுபவத்தைக் கொண்டுள்ளவர்கள் இப்பயிற்சி நெறிக்கு சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்கள்.





**களஞ்சிய/விநியோக/கருத்திட்ட பணியணியினருக்குமான பயிற்சித் திட்டங்கள்**

வழமையாக நிருமாணக் கைத்தொழிலுக்காகப் பணியாற்றும் பெருமளவு களஞ்சிய/விநியோககருத்திட்டப் பணியணியினர் தமது சம்பந்தப்பட்ட துறைகளில் முறைமையான பயிற்சியை மேற்கொள்வதற்கு வாய்ப்புக்கள் கிட்டுவதில்லை. இது பலதரப்பட்ட தொழிற்படுத்தல் பிரச்சினைகளுக்கு இட்டுச் சென்று இயந்திர சாதனப் பழுதுபார்த்தல் நிறுவனங்களின் தடையற்ற தொழிற்பாடுகளுக்கு ஊறு விளைவிக்கின்றன. இப்பயிற்சி தேவையைச் சமாளிப்பதற்கு இவ்விரு பயிற்சித் திட்டங்களும் விருத்தி செய்யப்பட்டன.

**கட்டிடச் சேவைகள் பொறியியல் பயிற்சித் திட்டங்கள்**

கட்டிடச் சேவைகள் பொறியியல் துறையில்ஈடுபட்டுள்ளபொறியலாளர்களுக்கும் கட்டிடக் கலைஞர்களுக்கும் பெருமளவு திட்டங்களை CETRAC நடத்தியது.

வர்த்தகக் கட்டிடங்களைப் பராமரிப்பதற்கு அவசியமான இந்த கட்டிட சேவைகளை உள்ளடக்குவதற்காக ஒரு சில பயிற்சி நெறிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. தீ பாதுகாப்பு முறைமைகள், மின்சார முறைமைகள், காற்றுச்சீராக்கல், காற்றோட்ட முறைமைகள், நீர் விநியோக, வடிகாலமைப்பு முறைமைகள் என்பனவே அவையாகும்.

**வழமையாக வடிவமைக்கப்பட்ட பயிற்சித் திட்டங்கள்**

நிர்மாணக் கைத்தொழிற் துறையில் ஈட்டப்பட்ட அனுபவத்துடன் நாட்டில் மாற்றமடைந்து வரும் கிராக்கியைப் பூர்த்திசெய்வதற்காக வாடிக்கையாளர்களுக்கான பயிற்சி செயற்றிட்டங்களை இனம் கண்டு விருத்தி செய்ததினூடாக பயிற்சியில் பலதரப்பட்டதும், குறிப்பானதுமான கிராக்கிகளை CETRACஇனால் வெற்றிகரமாக ஈடுசெய்வதற்கு இயலுமாகியது.

| | பயிற்சி நெறிகள் | பதிவு செய்யப்பட்ட | | வெளியேறிய | |
|---|---|---|---|---|---|
| | | திட்டங்களின் எண். | பங்கெடுப்பாளர்களின் எண். | திட்டங்களின் எண். | பங்கெடுப்பாளர்களின் எண். |
| 01 | **பாடசாலையை விட்டு விலகியோர் (மட்டம் I) அடிப்படை பொறிமுறை பயிற்சித் திட்டம்** | 2 | 60 | 2 | 57 |
| | **பயிற்சி பாடநெறிகள்** | இலக்கிடப்பட்ட விளைவு | | உண்மையான விளைவு | |
| | | திட்டங்களின் எண். | பங்கெடுப்பாளர்களின் எண். | திட்டங்களின் எண். | பங்கெடுப்பாளர்களின் எண். |
| 02 | **கனிஷ்ட பொறிமுறையாளர்கள் (மட்டம் II)** | | | | |
| | டீசல் என்ஜின்களின் பராமரிப்பு | *1* | *15* | - | - |
| | நீரியல் முறைமைகளின் பராமரிப்பு - 14M 22 | *1* | *15* | *1* | *16* |
| | டீசல் மின்பிறப்பாக்கிகளின் பராமரிப்பு -14M 25 | *1* | *15* | *2* | *77* |
| | கடவுதல்கள், தடைகள், பிடி முறைமைகளின் பராமரிப்பு14 - M26 | *2* | *30* | *1* | *20* |
| | தோரா மாற்றீடுகளினதும் செலுத்தல் முறைமைகளினதும் பராமரிப்பு -14 M 27 | *2* | *30* | *1* | *15* |
| | நிர்மாண இயந்திர சாதனத்தின் இயந்தி மற்றும் இலத்திரனியல் பராமரிப்பு - 14MT | *2* | *30* | *1* | *9* |
| | நீர் பம்பிகளினதும், அழுத்திகளினதும் பராமரிப்பு - 14 WPC | *1* | *15* | *2* | *50* |
| | தன்னியக்க இலத்திரனியல் முறைமையின் பராமரிப்பு-14 M24 | *2* | *30* | *1* | *27* |
| | நிர்மாண இயந்திர சாதனங்களை சேர்விஸ் செய்தல் - 14 SCE | *2* | *30* | *1* | *12* |
